
# மாயா பஞ்சகம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)



ப்ரக்ஞன்

# மாயா பஞ்சகம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

**தெளிவுரை**

**ப்ரக்ருன்**

# மாயா பஞ்சகம்

மாயை ஒன்றே எங்கும் வியாபித்துள்ளது. இந்த மாயை இரு பெரும் சக்திகளாக வெளிப்படுகின்றது.

அவைகள், **1. ஆவரணம். 2. விக்ஷேபம்** என்பனவாகும்.

இதில், ஆவரணம் என்பது மறைக்கும் சக்தி. விக்ஷேபம் என்பது தோன்றும் சக்தி எனப்படும். ஜீவர்களுக்கு தன் உண்மை சொரூபத்தை அறியவிடாமல் மறைக்கின்ற சக்தியை '**ஆவரணம்**' என்றும், இந்த உலகத்தை உண்மையாகத் தன்மீது ஏற்றிவைத்துப்பார்த்தல் '**விக்ஷேபம்**' என்றும் கூறப்படும்.

ஆவரணம் என்ற சக்தியானது, நம் உள்ளேயே அந்தர்யாமியாக இருக்கின்ற ஆத்மாவை அறிய விடாமல் மறைக்கின்றது. விக்ஷேபம் என்ற சக்தியோ, இல்லாத ஒன்றை இருப்பதுபோன்று காட்டி, அதை மனதிற்கு நம்ப வைத்து ஏமாற்றுகின்றது.

எவ்வாறு, கண்களுக்கு காட்சியாகும் கானல்நீர் பார்ப்பதற்கு உண்மை போன்றே இருக்கும், ஆனால், அருகே சென்று பார்த்தால், அங்கு நீர் இல்லை என்பது தெரியவரும்.

அதுப்போன்று,

இந்த உலகம் பார்ப்பதற்கு உண்மை போன்று நம் கண்களுக்கு காட்சியாகின்றது. ஆனால், இது மாயை.

எப்படி இதை மாயை என்று கூறமுடியும்? நாம்தான் எல்லாவற்றையும் பார்த்து, அனுபவித்து, அதிலே வருகின்ற இன்ப, துன்பங்களை எல்லாம் படுகின்றோமே? அப்படி இருக்கும் ஒன்றை “**மாயை**” என்று ஒதுக்கிவிட முடியுமா?

அதற்கு, முதலில் **மாயை என்றால் என்ன?** என்று தெரிய வேண்டும்.

மாயை என்றால், **இல்லாததை இருப்பதாக நினைத்து மயங்குவது** என்றும் கூறலாம்.

அத்வைத தத்துவம் மாயையைப் பற்றிப் பேசுகிறது.

நாம் காணும் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் பிரம்மமே. பிரம்மத்தைத்தவிர, இரண்டாவதாக ஒன்றில்லை என்கிறது அத்வைதம்.

மனிதர்கள், மரங்கள், விலங்குகள், புல் பூண்டுகள், அண்ட சராசரங்கள் ஆகிய யாவும் பிரம்மமே என்கிறது அத்வைதம்.

அப்படியானால் நாம் காணும் இந்தப் பொருள்கள் எல்லாம் என்ன? வெவ்வேறு மனிதர்கள், உயிர்கள், சூரியன், சந்திரன், பிற கிரகங்கள் ஆகியவைகள் எல்லாம் என்ன?

**எல்லாம் மாயை** என்கிறது அத்வைதம்.

சகமனைத்தும் பொய்யெனவே தானுணர்ந்தால் துக்க
சுகமனைத்தும் பொய்யன்றோ சோரா – திகபரத்தும்
விட்டுப் பிரியாத மேலான அத்துவிதக்
கட்டுக்குள் ஆவதென்றோ காண். - தாயுமானவர் பாடல்.

எல்லாமே பொய் என்றால், நாம் காண்பது, அனுபவிப்பது எல்லாமே பொய்யா? மகிழ்ச்சி, துக்கம், வலி, பரவசம், பசி, தூக்கம் எல்லாமே பொய்யா?

காணும் இந்த உலகம் பொய்யா? உயிரினங்கள் பொய்யா? சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள் எல்லாம் பொய்யா? என்னைச் சார்ந்தவர்கள் எல்லாம் பொய்யா? **"நான் இருப்பது பொய்யா ?"**

ஆம்! என்கிறது மாயாவாதம். எல்லாமே பொய்தான். அது நமக்குத் தெரியவில்லை என்கிறது.

**எப்படி எல்லாமே பொய்யாக இருக்க முடியும்?**

தரையில் ஒரு பாம்பைப் பார்க்கிறீர்கள். அச்சம் ஏற்படுகிறது. அடுத்த நிமிடமே, அது கயிறு என்று தெரிந்து

விடுகிறது. அப்போது அங்கே பாம்பு மறைந்து விடுகிறது அல்லவா? அதுப்போலத்தான் இருப்பது பிரம்மம் மட்டும்தான் என்று உணர்ந்தால், இந்த உலகம் மறைந்துவிடும் என்கிறது அத்வைதம்.

ஒரு குடம் இருக்கிறது. அதற்குள்ளும் ஆகாசம் இருக்கிறது. அதற்கு வெளியிலும் ஆகாசம் இருக்கிறது. குடத்தின் மேல் ஓடு உடைந்தால், வெளியில் உள்ள ஆகாசமும் உள்ளே இருக்கும் ஆகாசமும் ஒன்றாகி விடுகின்றன அல்லவா? அந்த குடத்தின் மேல் ஓட்டைப் போன்றதுதான் மாயை. இப்படி ஒரு விளக்கமும் தரப்படுகிறது.

பெரிய பணக்காரர் ஒருவர் தூங்கும்போது பிச்சை எடுப்பது போலக் கனவு காண்கிறார். கனவில் வருகின்ற வறுமையின் காரணமாக பசியால் அழுகிறார். வேறொருவர் மலையிலிருந்து கீழே விழுவது போலக் கனவு காண்கிறார். கனவு காணும்போது அது நிஜம்போல இருக்கிறது. வேதனை, அச்சம் எல்லாமே நிஜமாக இருக்கின்றன. விழித்த பிறகு, அது பொய் என்று தெரிகிறது.

அதுபோலத்தான் மாயை விலகியதும் உண்மை புரிகிறது. இப்படியும் ஒரு விளக்கம் அளிக்கப்படுகிறது.

ஆழத்தில் மறைந்திருக்கும் உண்மையை உணர்ந்ததும், மேற்பரப்பில் தோற்றமளிக்கும் உண்மை மறைந்து விடுகிறது. மேற்பரப்பில் இருப்பது **மாயை.**

கீழே இருப்பது கயிறுதான், பாம்பு அல்ல! என்று உணருவதுப்போல, மேற்பரப்பில் தெரிவது பொய் என்பதை அறிந்தால், பிரம்மமே நித்திய சத்தியம் எனபதையும், நாமே பிரம்மம் என்பதையும் உணரலாம் என்பதே தத்துவ தரிசனம்.

பாம்பாகத் தெரியும் கயிறை உணர அறிவும், விழிப்புணர்வும் தேவை. உலகமாகத் தெரியும் பிரம்மத்தை உணர **ஞானம்** மட்டுமே தேவை. ஞானத்தின் மூலம் நித்தியமான சத்தியத்தை "**இருப்பை**" உணரலாம் என்கிறது அத்வைதம்.

அத்தகைய ஞானம் ஒருவருக்கு உண்டாகும்போது, அறியாமையினால், அவரிடம் ஏற்றி வைக்கப்பட்டிருந்த மூன்று விதமான '**ஸத்யம்**' அறியப்படுகின்றது. இருப்பது ஒன்றேயான "**இருப்பு**" என்றும், அது ஒன்றேயாகிய '**ஸத்**' என்றும் உணரப்படுகின்றது.

ஆக, நம்மை நாம் சுயமாக விசாரித்துப் பார்க்கும் பொழுது, இது நம்முடைய எண்ணங்களில் உண்டான அறியாமைகளின் வெளிப்பாடு என்பது புரியவரும்.

இந்த நிலைக்கு காரணமான மாயைகளின் தன்மை பற்றி ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் அவர்கள் இந்த ஐந்து ஸ்லோகங்களில் மிக அழகாக எடுத்துக் கூறுகின்றார்.

அதுவே "**மாயா பஞ்சகம்**" எனப்படும்.

இது சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டு உள்ளது. இந்த ஸ்லோகங்களின் விளக்கங்களை எளிய தமிழ் மொழியில் எல்லோருக்கும் புரியும் விதமாக இங்கு கொடுக்கப்படுகின்றது.

निरुपमनित्यनिरंशकेऽप्यखण्डे
मयिचितिसर्वविकल्पनादिशून्ये।
घटयतिजगदीशजीवभेदं
त्वघटितघटनापटीयसीमाया॥ (१)

நிருபமனித்யனிரம்ஸகேऽப்யக$^{2}$ண்டே$^{3}$
மயிசிதி ஸர்வவிகல்பனாதி$^{3}$ஸூன்யே ।
க$^{4}$டயதி ஜக$^{3}$தீ$^{3}$ஸஜீவபே$^{4}$த$^{3}$ம்
த்வக$^{4}$டிதக$^{4}$டனாபடீயஸீமாயா॥ (1)

**<u>விளக்கம்:-</u>**

நிகரற்றதும், சாஸ்வதமானதும், பிரிக்கமுடியாததும், முழுமையானதும், சித் ஸ்வரூபமானதும், பேருணர்வானதும் ஆகிய என்னில், பரம்பொருளையும், ஜீவனையும் வேறுபடுத்தி, பல்வேறு வேற்றுமைகளை உண்டாக்குகின்ற இந்த மாயை நிகழ முடியாத எதையும் நிகழ்த்தவல்லது.

श्रुतिशतनिगमान्तशोधकान-
प्यहहधनादिनिदर्शनेनसद्यः।
कलुषयतिचतुष्पदाद्यभिन्ना-
नघटितघटनापटीयसीमाया॥ (२)

ஸ்ருதிஸதனிக$^{3}$மாந்தஸோத$^{4}$கான–
ப்யஹஹ த$^{4}$னாதி$^{3}$னித$^{3}$ர்ஸனேன ஸத்$^{3}$ய: ।
கலுஷயதி சதுஷ்பதா$^{3}$த்$^{3}$யபி$^{4}$ன்னா–
நக$^{4}$டிதக$^{4}$டனாபடீயஸீமாயா॥ (2)

**விளக்கம்:-**

வேதங்கள் பல கற்றும், செல்வங்கள் பல பெற்றும் வாழுகின்ற வல்லுனர்களைக்கூட அறிவு மயங்கச் செய்து, அவர்களிடம் குழப்பத்தை உண்டாக்குகின்ற இந்த மாயை ஆனது, நிகழ முடியாத எதையும் நிகழ்த்தவல்லது.

सुखचिदखण्डविबोधमद्वितीयं
वियदनलादिविनिर्मितेनियोज्य।
भ्रमयतिभवसागरेनितान्तं
त्वघटितघटनापटीयसीमाया॥ (३)

ஸுக2சித3க2ண்ட3விபோ3த4மத்3விதீயம்
வியத3னலாதி3வினிர்மிதே நியோஜ்ய।
ப்4ரமயதி ப4வஸாக3ரே நிதாந்தம்
த்வக4டிதக4டனாபடீயஸீமாயா॥ (3)

**விளக்கம்:-**

ஒரு பேச்சுக்குகூட விளக்க முடியாத, பிளக்க முடியாத, இரண்டற்ற, நித்யானந்த, பேருணர்வான என்னை ஆகாயம், காற்று போன்ற பஞ்சபூதங்களில் செலுத்தி, சம்சாரக்கடலில் தள்ளச் செய்கின்ற இந்த மாயை, நிகழ முடியாத எதையும் நிகழ்த்தவல்லது.

अपगतगुणवर्णजातिभेदे
सुखचितिविप्रविडाद्यहंकृतिंच।
स्फुटयतिसुतदारगेहमोहं
त्वघटितघटनापटीयसीमाया॥ (४)

அபக$^{3}$தகு$^{3}$ணவர்ணஜாதிபே$^{4}$தே$^{3}$
ஸுக$^{2}$சிதி விப்ரவிடா$^{3}$த்$^{3}$யஹங்க்ரு’திம் ச ।
ஸ்பு$^{2}$டயதி ஸுததா$^{3}$ரகே$^{3}$ஹமோஹம்
த்வக$^{4}$டிதக$^{4}$டனாபடீயஸீமாயா॥ (4)

**<u>விளக்கம்:-</u>**

ஆனந்தமான பேருணர்வாகிய என்னில், குணத்தினால், இது நல்லது, இது கெட்டது என்றும், நிறத்தினால், இவன் சிகப்பு, கறுப்பு என்றும், ஜாதியினால் நான் அந்தணன், வைசியன் என்றும், அத்துடன், பல அகங்கார உணர்ச்சிகளையும், மனைவி, மக்கள், வீடு என்ற மோக உணர்ச்சிகளையும் உண்டாக்கிய இந்த மாயை, நிகழ முடியாத எதையும் நிகழ்த்தவல்லது.

विधिहरिहरविभेदमप्यखण्डे
बतविरचय्यबुधानपिप्रकामम्।
भ्रमयतिहरिहरभेदभावा-
नघटितघटनापटीयसीमाया॥ (५)

விதி$^{4}$ஹரிஹரவிபே$^{4}$த$^{3}$மப்யக$^{2}$ண்டே$^{3}$
ப$^{3}$த விரசய்ய பு$^{3}$தா$^{4}$னபி ப்ரகாமம்।
ப்$^{4}$ரமயதி ஹரிஹரபே$^{4}$த$^{3}$பா$^{4}$வா–
நக$^{4}$டிதக$^{4}$டனாபடீயஸீமாயா॥ (5)


**விளக்கம்:-**

முழுமையான சிதானந்த உணர்வான என்னிடம் ஹரி, ஹரன் என்று கடவுளர்களில் வேற்றுமைகளை உண்டாக்கி, எனக்கு வேறாக பிரிவினைகளை உண்டாக்கி, மிகப்பெரிய அறிஞர்களைக்கூட இந்த விசயத்தில் குழப்பிவிடுகின்ற இந்த மாயை நிகழ முடியாத எதையும் நிகழ்த்தவல்லது.

**ஓம் தத் சத்**

# மாயா பஞ்சகம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)



ப்ரக்ஞன்